செய்தி வெளியீடு எண்.74 நாள்.03.02.2017

**புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் தமிழகத்தில் அனைத்து காய்ச்சல்களும் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

**தேவையான மருந்து மாத்திரைகள், கவசங்கள் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளது.**

**பொதுமக்கள் பதற்றமோ, பீதியோ அடையத் தேவையில்லை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தகவல்**

~~~~~

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பருவக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக தமிழகம் முழுவதும் தொடர்ந்து ஆய்வு நடத்தி வரும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், திருவள஌ர் மாவட்ட அரசு பொது மருத்துவமனையை இன்று (03.02.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டம்தோறும் மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து, ரயில் நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள், சந்தைகள், அனைத்து மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 11,14,000 டாமிபுளு மாத்திரைகள், 31,272 டாமிபுளு சிரப், 10,649 மருத்துவ பாதுகாப்பு கவசங்கள், 30,681 N95 பாதுகாப்பு முக கவசங்கள் மற்றும் 10,00,000 மூன்று அடுக்கு முக கவசங்களும் கையிருப்பில் உள்ளன. பன்றிக்காய்ச்சலைக் கண்டறிவதற்கு தமிழகத்தில் சிறப்பு மையங்களாக கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம் உட்பட ஆறு ஆய்வு மையங்களும், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒரு ஆய்வு மையமும் மற்றும் 13 தனியார் ஆய்வு மையங்களும் செயல்படுகின்றன. அரசு மருத்துவ நிலையங்களில் பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

காய்ச்சல், சளி மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகளுடன் உள்ள நபர்கள் தாங்களாகவே மருந்துகளை எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனையையோ அல்லது உரிய மருத்துவரையோ அனுகி முறையான சிகிச்சை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார். மேலும் தனியார் மருத்துவர்கள் பன்றிக்காய்ச்சல் நோய் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு சிகிச்சை வழங்கும்போது வகுக்கப்பட்ட (Protocol)) முறையில் மட்டுமே பரிசோதனை மற்றும் சிகிச்சை மேற்கொள்ளபட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பன்றிக்காய்ச்சல் நோய் பரவுவதை தவிர்க்க தும்மும்போதும் மற்றும் இரும்பும்போதும் மூக்கு மற்றும் வாயினை துணியைக் கொண்டு மூடுதல், கைகளை சுத்தமாக சோப்பு போட்டு நன்கு கழுவுதல் போன்ற சுகாதாரமான பழக்க வழக்கங்களை கடைபிடிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பன்றிக்காய்ச்சல் நோய் கட்டுப்படுத்த தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது. இது ஒரு குணப்படுத்தக் கூடிய காய்ச்சல் தான். பொது மக்கள் காய்ச்சல் குறித்து 24 மணிநேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில் தகவல் மையம் (தொலைப்பேசி எண் 044 - 24350496, 24334811 , 9444340496 , 9361482899) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் பெற "104" சேவையையும் பயன்படுத்திக்கொள்ளலாம். காய்ச்சலை தடுப்பதற்குரிய அனைத்து மருத்துவ வசதிகள், முன்னேற்பாடு நடவடிக்கையாக எடுக்கப்பட்டுள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்டாலும் குணப்படுத்தக்கூடிய போதிய மருத்துவ வசதிகள் தயார் நிலையில் உள்ளது. எனவே பொது மக்கள் காய்ச்சல் குறித்து பீதியோ பதற்றமோ அடைய தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன்(பொன்னேரி), திரு.டி.ஏ.ஏழுமலை(பூவிருந்தவல்லி) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க.குழந்தைசாமி , இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.மோகனன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பிரபாகர், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~